T.S.
சென்னை-600 078.

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

6-9-59

சுடுகாட்டுச் சாம்பல்

மாலைமணி
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 1 | 6—9—59 | ஒலி 47

தி. மு. க. மந்திரி சபை !

திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்டு வருகிற பதினேழாம் தேதியோடு சரியாக பத்தாண்டுகள் முடிகின்றன!

நமது மதிப்பிற்குரிய பெரியார் இராமசாமி அவர்கள் பொருந்தாத் திருமணம் செய்து கொண்டு நம்மை யெல்லாம் துரத்தியடித்தார்! நாமோ தாங்காத துயரோடு தனிக் கழகம் அமைத்து பெரியாரின் இலட்சியக் கருத்துகளை நாடெங்கும பரப்பி திராவிடத்தின் விடுதலைக்காக அல்லும் பகலும் பாடுபட்டு வருகிறோம்!

இந்தப் பத்தாண்டு காலக்தில் திராவிட முன்னேற்றக் கழகம் செய்துள்ள பணிகளையும், அதற்காக அது புரிந்துள்ள தியாகங்களையும் நாம் நினைத்துப் பார்த்தால் நமக்கே ஒரு கணம் திகைப்பும் ஆச்சரியமும் உண்டாகும்!

புயல் வந்து புகுந்த போது மக்களுக்கு அபயக் குரல் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகம் தான்! கைத்தறி ஆடைகள் தேங்கி அதனால் ஏங்கித் தவித்துக்கொண்டிருந்த கைத்தறி நெசவாளர்களின் கண்ணீரைத் துடைத்து அவர்களை வாழவைத்ததும் திராவிடமுன்னேற்றக் கழகம் தான்! தமிழகத்துக்கு ஆபத்து நேரும் போதெல்லாம், தமிழகத்து மக்கள் தவித்திடும் போதெல்லாம் ஓடி வந்து பணிபுரிவது, மக்களை நாடி வந்து ஆறுதல் கூறுவது திராவிட முன்னேற்றக் கழகம் தான்!

இதனால் தான் திராவிட முன்னேற்றக் கழகம் தென்னகத்தின் இணையற்ற தேசிய இயக்கமாக விளங்கி மக்களின் இதயத்திலே அழியாத இடத்தையும் பெற்று விட்டது!

தென்னகத்தில் வேறு எந்தக் கட்சிக்கும் இல்லாத செல்வாக்கு, ஆதரவு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தான் உண்டு என்பதையும் நாம் அறிவோம்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏன் இத்தனை செல்வாக்குக் கிடைத்திருக்கிறது, ஏன் இத்தனை ஆதரவு இருக்கிறது என்று கேட்டால் அது வைத்திருக்கிற சிறந்த கொள்கையும், அந்தக் கட்சி பெற்றிருக்கிற ஆற்றல் மிகக தலைவர்களுமே காரணமாகும்! அத்தோடு சுயநலம் சிறிதும் இல்லாத தூய எண்ணத்தோடு, களங்கமில்லா உள்ளத்தோடு பணிபுரிகின்ற இலட்சக் கணக்கான வாலிபர்களும், அவர்களது அயராத உழைப்பும் முக்கிய காரணமாகும்!

எல்லாக் கட்சிகளுக்கும் உறுப்பினர்கள் உண்டு! எல்லா கட்சிகளுக்கும் தொண்டர்கள் உண்டு! காங்கிரஸ் கட்சிக்கு தொண்டர்கள் இருக்கிறார்கள், கம்யூனிஸ்டு கட்சிக்கு ஊழியர்கள் இருக்கிறார்கள், பிரஜா சோஷலிஸ்டு கட்சிக்கும், சோஷலிஸ்ட்டு கட்சிக்கும் தொண்டர்கள் உண்டு! அங்கெல்லாம் சம்பளம் பெற்று, ஊதியம் வாங்கிக் கொண்டு வேலை செய்யும் தொண்டர்கள் தான் உண்டு!

இங்கே ஒரு அணா டீ காசையும் எதிர்பார்க்காமல், கைப்பொருளையும் செலவு செய்து கொண்டு கட்சிக்காகவே வாழ் நாளை அர்பணித்து விட்ட தொண்டர்கள், இளைஞர்கள், வாலிபர்கள், மாணவர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள்—இல்லை இல்லை—பதினாயிரக் கணக்கில் இருக்கிறார்கள் என்று சொன்னால் கூட அது மிகையாகாது!

நமது தொண்டர்களின் பேச்சும், மூச்சும் நமது இலட்சியக் கருத்துக்களைப் பற்றியதாகவே இருக்குமே தவிர வீட்டைப் பற்றி, தன் வாழ்வைப் பற்றி, தன் பெண்டு பிள்ளைகளைப் பற்றி எதுவுமே இருக்காது! இந்த நிலை விடுதலை இயக்கத்திற்கு மட்டுமே. மக்கள் கட்சிக்கு மட்டுமே தான் இருக்கும்!

எனவே தான் திராவிட முன்னேற்றக் கழகம் தென்னகத்தின் விடுதலை இயககமாக, தென்னக மக்களின் சொந்தக் கட்சியாக விளங்கி வருகிறது!

இத்தகைய சக்தி படைத்த இயக்கம் ஒன்று தென்னகத்தில் இருந்தும் தென்னகம் ஏறத்தாழ பன்னிரெண்டு ஆண்டு காலமாக ஒரே கட்சியின் ஆதிக்கத்தின் கீழ் வடநாட்டுக்கு அடிமைப் பட்டுக் கிடக்கிறது! இது தமிழகத்திற்கு மட்டுமல்ல நமக்கும், நமது இயக்கத்திற்கும் சற்று இழுக்கு தான் என்பதை நாம் மறைக்க முடியாது மறுக்கவும முடியாது!

இதுவரை மக்களுக்கு நல்லறிவூட்டும் பணியிலும், மக்களின் மூடக் கொள்கைகளை ஒழிக்கும் பணியிலும் ஆட்சியாளர்கள் செய்திடும் தவறுகளை தட்டிக் கேட்டு அவர்களைத் திருத்திடும் பணியிலும் மட்டுமே நாம் கவனத்தை செலுத்திக் கொண்டிருந்தோம்! அவ்வப்போது ஒரு சில பிரச்னைகளை முன் வைத்து சில போராட்டங்களையும் நடத்தி வந்திருக்கிறோம்!

சென்ற பொதுத் தேர்தலில் தான் நாம் பங்கு கொண்டு நமது விடுதலை முழக்கத்தை சட்டமன்றத்திலிருந்தே கிளப்ப ஆரம்பித்தோம்!

அதன் பிறகு சென்னை மாநகராட்சி மன்றத்தைக் கைப்பற்றி ஆட்சி புரியவும் தொடங்ினோம்! இதன் மூலம் நமது சக்தியை டில்லி ஏகாதிபத்தியமும், காங்கிரஸ் சுயநலவாதிகளும் புரிந்து கொள்ளத் தலைப்பட்டனர்! திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எத்தனை வலிவிருக்கிறது, எத்தனை பொலிவிருக்கிறது என்பதை தெரிந்து கொண்டிருக்கின்றனர்!

எனவே நாம், நமது சக்தியின் அளவை எதிரிகளுக்கு உணர்த்தும் காலம் நெருங்கிக் கொண்டே வருகிறது! நாம் முன்னிலும் அதிக ஊக்கத்தோடும், கவனத்தோடும், கட்டுப்பாட்டோடும் பணிபுரிய வேண்டும்!

நாளுக்கு நாள் நாகரீகமும், மனிதாபிமானமும் வளர்ந்துக் கொண்டு வருகிற நாள் இது! இந்த நாளில் கத்தியைக் காட்டியோ, ரத்தத்தை சிந்தியோ, பெரும் போராட்டங்களை நடத்தியோ ஒரு நாட்டை விடுவிப்பது என்பது அவ்வளவு நல்லதல்ல! எனவே நாம் அரசியலில் நேரடியாகப் பங்கு கொண்டு ஆட்சியைக் கைப்பற்றி விடுதலை கீதம் முழங்குவதொன்றே சிறந்த வழியாகும்! அதற்கான நாள் வெகு தொலைவில் இல்லை என்பதையும், அந்த நாள் விரைந்து நம்மை நோக்கிவந்து கொண்டிருக்கிறது என்பதையும் நாம் தெரிந்து கொண்டு அதற்கேற்பப் பணிபுரிய வேண்டும்!

1962-ம் ஆண்டு பொதுத் தேர்தல் வருகிறது! அப்போது நாம் செய்யப் போகின்ற பணி தான் நமது வருங்கால வாழ்வை நிர்ணயிக்கும் என்பதை தெள்ளத் தெளிய அறிய வேண்டும்!

திராவிட முன்னேற்றக் கழகம் இல்லாத ஊரே இல்லை, திராவிட முன்னேற்றக் கழகம் இல்லாத நகரமே இல்லை! திராவிட முன்னேற்றக கழகத்தினர் இல்லாத வீடும் இல்லை! மக்கள் வசிக்கும் இடமெல்லாம், மனித இனம் வாழும் இடமெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆல் போல் தழைத்து வளர்ந்து வருகிறது!

எனவே அந்த மக்கள் சக்தியை நாம் திரட்ட வேண்டும்! தமிழ் இனத்தில் பிறந்து விட்ட, திராவிடர்களாய் வாழ எண்ணும் ஒவ்வொருவரையும் நமது நண்பர்களாய், நமது தோழர்களாய், திராவிட முன்னேற்றக் கழகத்தின் உற்றத் துணைவர்களாய் இருந்து பணிபுரியச் செய்ய வேண்டியது நமது கடமையாகும்!

மேடை அமைத்து ஒலி பெருக்கி வைத்து, போஸ்டர்களை ஒட்டி நமது அண்ணாவை அழைத்து, கருணாநிதியைக் கூப்பிட்டு, பொதுச் செயலாளரைத் தலைமை வகிக்க செய்து நாம் பிரச்சாரம் செய்வதில் மட்டும் காலத்தைக் கடத்திக் கொண்டு இருக்கக் கூடாது!

வீடு வீடாகச் சென்று சேலத்தைச் சொல்வி, அங்கே கிடைக்கும் இரும்பைக் காட்டி—"இன்னும் நமக்கேன் வாழ்வு கிடைக்கவில்லை" என்ற காரணத்தையும் விளக்கி மக்களுக்கு நாட்டுப் பற்றை ஊட்ட வேண்டும், இன உணர்வை அளிக்க வேண்டும்!

(8-ம் பக்கம் பார்க்க)

சென்னையில் பிரயாண வரிக்கு எதிர்ப்பு!

காஞ்சியிலே அதற்கு வரவேற்பு !

சர்வகட்சிகள் ஒன்றுபடுவது எங்கே? எப்படி ?

தி. மு. க. ஆட்சிக்கு வந்துவிடுமே என்ற பயம் காங்கிரஸ்காரர்களை ஆட்டிப்படைக்கிறது !

நகரசபை லாரித் தொழிலாளர் ஆண்டு விழாவில் அண்ணாவின் பேருரை!

மாநகராட்சி மன்ற லாரி தொழிலாளர் சங்கத்தின் நான்காவது ஆண்டு விழாவின் போது அறிஞர் அண்ணா ஆற்றிய சொற்பொழிவு.



அன்புமிக்க தலைவரவர்களே அருமைத் தோழர்களே! உங்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கம்.

சென்னை மாநகராட்சி மன்ற லாரித் தொழிலாளர்கள் தங்களுக்கென ஒரு சங்கம் அமைத்துக் கொண்டு சிறப்பாக பணியாற்றி வருவதையும், நான்காவது ஆண்டு விழாவிலே எங்களை கலந்து கொள்ள வைப்பதன் மூலம் நாங்களும் அவர்களது குறைகளைத் தெரிந்து கொள்ளுவோம் என்பதற்காக இன்றைய கூட்டத்தை இவ்வளவு சிறப்பான முறையில் ஏற்பாடு செய்துள்ளதையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

இந்தக் கூட்டத்திற்கு மாநகராட்சி மன்றத் தலைவரான அ. பொ. அரசுவையும், துணை மேயரான சிவசங்கரனையும், மேலும் ஜீவரத்தினத்தையும், இந்த சங்கதின் தலைவரான குசேலர் அவர்களையும் அழைத்துள்ளீர்கள்! இவர்கள் எல்லாம் தொழிலாளர் பிரச்னையில் அக்கறை காட்டுபவர்கள், இவர்கள் போதாதென்று என்னையும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் செய்து எழுநூறு தொழிலாளர்களான உங்களது குறைகளையும் கோரிக்கைகளையும் எங்கள் முன்னே எடுத்து வைத்திருக்கின்றீர்கள். இப்படிப்பட்ட முயற்சியை நான் பெரிதும் பாராட்டுகிறேன். அந்தக் குறைகளை யெல்லாம் கவனித்து உங்கள் கோரிக்கைகளை யெல்லாம் நிறைவேற்றுவதாக தோழர் ஜீவரத்தினம் வாக்களித்தார்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் தான் இந்தக் கூட்டத்தின் அறிக்கை யொன்று என்னிடம் கொடுக்கப்பட்டது. இந்த அறிக்கையில் தொழிலாளர்கள் தங்களுக்கு உள்ள பல கோரிக்கைகளை தங்களது அதிகாரிகளுக்கு தெரிவித்துக் கொண்டு அந்த கோரிக்கைகளை நிறைவேற்றும்படி கேட்டுள்ளனர். இதற்கு அதிகாரிகள் கொடுத்துள்ள பதில் திருப்திகரமானதாயில்லை. இந்தக் கோரிக்கைகள் இந்த இந்த காரணத்தால் கவனிகக முடியாது என்ற பாட்டைத் தான் அதிகாரிகள் பாடியுள்ளனர்.

எந்த, எந்த அரசியல் கட்சியிடமெல்லாம் நமது கோரிக்கைகளை கொடுத்தோம், எந்த எந்த அதிகாரிகளிடமெல்லாம் நமது கோரிக்கைகளைத்தெரிவித்தோம். ஆனால் நமது கோரிக்கைகள் கவனிக்கப் படவில்லை. இப்போது தான் தி. மு. கழகத்தார் நகரசபையிலே ஆட்சிக்கு வந்திருக்கின்றனரே. அவர்களிடமாவது நமது கோரிக்கைகளை தெரிவித்தாலாவது நமது கோரிக்கைகள் கவனிக்கப்படுகின்றனவா என்று பார்க்கலாம் என்று முடிவு செய்து மேயரையும், துணை மேயரையும், இந்தக் கட்சிக்கு முக்கியமானவன் என்று கருதப்படும் என்னையும்கொண்டு வந்து நிறுத்தி எங்களது நல்லெண்ணத்தை பரீட்சிப்பதனால் உங்களது கோரிக்கைகள் நியாயமானவைகளாக இருக்குமேயானால் எப்போதும் உங்கள் பக்கம் இருப்போம் என்பதில் சந்தேகம் வேண்டாம். எங்கள் சொந்தப் பிரச்சினையை விட உங்களது பிரச்னைகளில் அக்கறை காட்ட எப்போதும் தயாராக இருக்கிறோம். நீங்கள் தெரிவித்த குறைகளை நிச்சயமாக கவனித்து நல்ல முடிவெடுக்கும்படி எனது நண்பர்களையும் வேண்டிக்கொள்கிறேன்.

தோழர் ஜீவரத்தினம் சொன்னார் நகரசபையில் உள்ள எல்லா கட்சித்தலைவர்களும் ஒத்துழைப்பதால் உங்கள் குறைகள் அனைத்தையும் போக்கிவிட முடியும் என்று கூறினார். அதுதான் இந்த நாட்டில் கிடையாது. எல்லாக் கட்சித் தலைவர்களும் எதிலும் ஒத்துழைப்பது என்பதே கிடையாது, இது நமது அரசியலில் காணப்படும் சாதாரண விஷயம். இதை நான் வெட்ட வெளிச்சமாக சொல்கிறேன். மூடி வைப்பதில் பிரயோஜனமில்லை. என்னுடைய அரசியல் வாழ்வில்நான் எப்போதுமே எதையுமே மூடி வைப்பதில்லை.

ஒரு கட்சி வளர்ந்தால் அது நாட்டைக்கைப்பற்றி விடுமே. அதனால் அந்தக் கட்சி வளரக் கூடாது. இந்தக்கட்சி வளர்ந்தால் அந்தக் கட்சி அழிந்த விடுமே. இந்தக் கட்சி தலையெடுத்தால் அந்தக் கட்சி தரை மட்டமாகி விடுமே! அவனும் வாழ்ந்து நாமும் பார்ப்பதா? மானும் புலியும் ஒரே காட்டில் வாழ்வதா? புலியின் வயிறு பெருக்கவேண்டுமானால் மான் ஒழிந்து தானே ஆக வேண்டும். இந்தக் கட்சி மேலுக்கு வந்தால் அந்தக் கட்சி ஒழிந்தாக வேண்டும் எனும் எண்ணம் இன்று வரை இந்த நாட்டு அரசியலில் சாதாரணமாக காணப்படும் விஷயம். இன்று வேண்டுமானால் இந்த மேடையிலே சர்வகட்சித்தலைவர்களும் கூடி இருக்கலாம். வெறும் உபசாரத்திற்காக எல்லோரும் ஒன்றுபடலாம், ஒன்று படலாம் என்று பேசுகிறோம், ஆனால் உண்மையில் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்று படுவதில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை இன்று வரை நாட்டில் உருவாகவில்லை.

உதாரணத்திற்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன், நகரசபையின் வருமானத்தைப் பெருக்க பிரயாண வரி போடலாமா என்று மேயர் கேட்டார். பிரயாண வரி போட்டு விடவில்லை. போடலாமா என்று தான் கேட்டார். மற்ற அரசியல் கட்சிகள் எல்லாம் வரியை போட்டு விட்டு அதற்குப் பின்னால் இதற்காக இந்த வரியைப் போட்டோம் என்று விளக்கம் தரும். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினரோ வரி போடு முன் இந்த வரியைப் போடலாமா என்று கேட்டனர். இந்த வரியைப் போடும் விஷயத்தில் மற்ற அரசியல் கட்சிகள் எங்களை பரிட்சை செய்யப் பார்க்கின்றனர்.

இந்தப் பரிட்சையை எதற்கு உதாரணமாக கூறலாமென்றால் நம்முடைய நாட்டில் கல்யாண காலத்திலே மணப்பெண்ணுக்கு நலுங்கு வைக்கும் வழக்கம் ஒன்று உண்டு. அப்படி பெண்ணுக்கு நலுங்கு வைக்கின்ற நேரத்தில் சில பாட்டிகள் பெண்ணின் கையில் சந்தனத்தை தடவிக் கொண்டே பெண்ணின் கையில் உள்ள வளையல்கள் எத்தனை, அவை எத்தனை சவரன்களில் செய்ததாக இருக்கும்

6-ம் பக்கம் பார்க்க

சுடுகாட்டுச் சாம்பல்

பி. எஸ். இளங்கோ

அத்தியாயம் 7

போலீஸ் அதிகாரி அருமை நாயகம் தன்வீட்டு முன் ஹாலில் அங்கும் இங்குமாக நடை போட்டுக் கொண்டிருந்தார்! கையிலிருந்த பிரம்பை சுழற்றிக் கொண்டிருந்தது அவர் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதைத் தெள்ளத் தெளிய படம் பிடித்துக் காட்டிக் கொண்டிருந்தது! அவரது முகம் சோகத்தால் வாடி வதங்கிக் கிடந்தது! எதையோ பறி கொடுத்து விட்டு மீளாத சோகத்தை அடைந்து விட்டது போல் அவரது உருவம் காணப்பட்டது! "எதற்கும் அஞ்சாத நெஞ்சம், துப்பாக்கியை எடுத்தால் ஆயிரம் பேரானாலும் சுட்டு வீழ்த்தும் உறுதி படைத்த உள்ளம் இன்று உடைந்து சுக்கல் சுக்கலாகி விட்டது" என்பதை அவரது ஒளியிழந்த கண்கள் எடுத்துச் சொல்லிக் கொண்டே இருந்தன!

"மாமா" என்ற குரல் கொடுத்துக் கொண்டே ஒரு இளைஞன் உள்ளே நுழைந்தான்!

"வா சுந்தரம் வா!" என்று அந்த சோகத்திலும் வந்த இளைஞனை வரவேற்றார்!

"சௌக்கியமா மாமா" வந்த இளைஞன் க்ஷேமம் விசாரித்தான்!

"சௌக்கியம்தான்! இப்படி உட்காரு" என்று ஏதோ ஒப்புக்குச் சொல்லிவைத்தார்!

பக்கத்திலிருந்த பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு "ஏன் மாமா கவலையோடு இருக்கிறீர்கள்" என்று அருமைநாயகத்தை விசாரித்தான்!

"நடக்காதது நடந்துவிட்டது சுந்தரம்" என்றார் அருமை நாயகம்!

"என்ன மாமா நடந்து விட்டது! சொல்லுங்கள்—உங்கள் கவலையை நான தீர்த்து வைக்கிறேன்" என்றான் சுந்தரம்!

"கொள்ளை போய்விட்டது சுந்தரம். கொள்ளை போய்விட்டது!"

"எங்கே மாமா!"

"இங்கேதான்"! அருமை நயகம் பதட்டத்தோடு கூறினார்!

"இங்கேயா?" ஆச்சரியப்பட்டான் சுந்தரம்!

"ஆமாம்! இங்கேதான்!" அருமை நாயகம் நெஞ்சம் படபடக்கச் சொன்னார்!

"எப்போது திருடினார்கள் மாமா? எதைத் திருடினார்கள் மாமா!" சுந்தரம் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சினான்!

அருமைநாயகத்திற்கு என்ன சொல்லுவதென்றே புரியவில்லை மௌனம் சாதித்தபடியே பக்கத்திலிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்தார்! அப்படியே சிறிது அயர்ந்தும் விட்டார்!

"நல்ல சமயம்! அவனுக்குத் தங்கம் போனால் என்ன? பொன்னும் வைரமும் போனால் நமக்கென்ன! எனக்கு என் தங்கம் கிடைத்தால் சரி" என்று மனதில் எண்ணியவாறு சுந்தரம் உள்ளே நுழைந்தான்! சுற்றும் முற்றும் பார்த்தான்! யாரையுமே காணோமே என்ற திகிலடைந்தான்! "வேல்விழி, வேல்விழி" தன் ஆசையை நிறைவேற்ற ஓசை கொடுத்தான்! நிசப்தம் தான் நிலவியது! சமையல் அறையை நோக்கினான், அங்குமில்லை அவள்! படுக்கை அறைக்குள் நுழைந்தான்! விரித்த பஞ்சணை விரித்தபடியே தான் கிடந்தது! பஞ்சவர்ணக் கிளி தான் கிடைக்க வில்லை, அந்தப் பஞ்சணையிலாவது சிறிது நேரம் உட்காரலாமே என நினைத்து உட்கார்ந்தான்! அதில் தான் அவனுக்கு எத்தனை மகிழ்ச்சி! எத்தனை ஆறுதல்! விரித்துக் கிடந்த வெண்பட்டை எடுத்தான் வேல்விழியென அதை நினைத்துப் போர்த்திக் கொண்டு ஆனந்தப்பட்டான்! கீழே குனிந்தான்! உடைக்காத கவர் ஒன்று கிடந்தது! எடுத்துப் பிரித்தான்! படிக்க ஆரம்பித்தான்!

அன்புள்ள அப்பா!

அத்தான் வீட்டிற்குச் சென்றிருக்கிறேன்! நாளை மாலை திரும்பி வந்து விடுகிறேன்! கவலைப்படாதீர்கள்!

அன்புள்ள உங்கள்
மகள்
வேல்விழி

"சுந்தரம்! பயப்படாதேடா! உன் அன்புக்காதலி உன்னைத் தாண்டா நாடிச் சென்றிருக்கிறாள்!" என்று தனக்குத் தானே வாய்விட்டுக் கத்திக் கொண்டிருந்தான் சுந்தரம்!

கந்தரத்திற்கு ஒரே மகிழ்ச்சி! கிடைக்காத பொருள் கிடைத்து விட்டதே என்ற ஆனந்தம்! துள்ளிக் குதித்துக்கொண்டே வெளியே ஓடி வந்தான்!

"மாமா, மாமா! வேல்விழி என்னைத் தேடிக்கொண்டு சென்றிருக்கிறாளாம்! நான் போகிறேன்" என்று கூறிககொண்டே வேல்விழி எழுதிய கடிதத்தை அருமை நாயகத்திடம் கொடுத்து விட்டு ஓட்டமும், நடையுமாக வீட்டை நோக்கிப் புறப்பட்டான் சுந்தரம்!

அருமைநாயகத்திற்கு ஒன்றுமே புரியவில்லை! சுந்தரம் என்றால் வேம்பாகக் கருதுவாளே வேல்விழி! அந்த வேல்விழியா இன்று சுந்தரத்தைத் தேடிக் கொண்டு சென்றிருப்பாள்! அருமைநாயகத்தின் முகம் வியர்வைத் துளிகளால் நனைந்து கிடந்தது!

வேல்விழியின் கடிதத்தைப் பலமுறை படித்தார்! "வேல்விழி அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம் என்று நினைப்பவள்! தன் தாயின் ஆசையை நிறைவேற்றவே, தந்தைவிருப்பப்படி நடக்கவே சுந்தரத்தை நாடிச் சென்றிருக்கலாம்" என்ற எண்ண வட்டத்திலே சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தார் அருமைநாயகம்!

சிறிது நேரம் யோசித்தார்!

"படித்துப் பட்டம் பெற்று பகுத்தறிவோடு வாழும் என் மகள் வேல்விழி எங்கே? பட்டிக்காட்டுப் பையன் படிப்பு வாசனையே இல்லாத அந்த சுந்தரம் எங்கே?"

"படிப்பு! என்ன படிப்பு வேண்டி இருக்கிறது! பணமிருக்கிறது, பத்துப்பேர் மதிக்க பதவியும் வரப் போகிறது! இது போதாதா?"

"சேச்சே! பணம்தானா நம் மகளுக்கு வாழ்வளிக்கப் போகிறது! எனக்கிருக்கிற சொத்து தான் இன்னும் மூன்று தலைமுறைக்கு வருமே!"

"மூன்று தலைமுறைக்கு வந்தால் போதுமா? அதற்குப் பிறகு!

அருமைநாயகம் சிந்தனைக் கடலிலே மூழ்கி ஆங்காங்கே ஆசை என்னும் சுழலில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தார்!

சுந்தரம், அருமைநாயகத்தின் மனைவி சொர்ணத்தம்மாளின் அண்ணன் சிங்காரம்பிள்ளையின் ஒரே மகனாவான்!

சித்தூர் சிங்காரம் பிள்ளை என்றால் அந்த ஊரே சிம்ம சொப்பனம் காணும்! சிங்காரத்தின் பெயரைக்கேட்டால் அழுத

பிள்ளைகள் கூட வாய் மூடும் என்பார்கள்!

சிங்காரம்தான் சித்தூருக்கே பெரிய மனிதர்! இத்தனைக்கும் அவர் உடுத்துவது நாலு முழக் கதர் வேட்டிதான்! உடம்பை ஒரு கதர் துண்டால் போர்த்திக் கொண்டு, தலையிலே ஒரு காந்திக் குல்லாவையும் வைத்துக் கொண்டு தெரு வீதி வழியே சென்றால் அவரை தமிழ் நாட்டு காந்தி போகிறார் என்றுதான் அனைவரும் சொல்லுவார்கள்!

"நாலு இலட்சத்திற்கு மேல் சொத்து இருந்தும் பத்து வருஷம் மந்திரி வேலை பார்த்தும் கொஞ்சம் கூட அகந்தை இல்லை ஆடம்பரம் இல்லை பார்த்தீர்களா" என்று சிலர் பேசிக் கொள்வார்கள்!

"எல்லாம் வெளி வேஷம்! நாலு முழ கதர் வேட்டியைக் கட்டிக் கொண்டே நாட்டை ஏமாற்றுகிறான்!" என்று சிலர் சொல்லத்தான் செய்தார்கள்! அதில் உண்மையும் இல்லாமலில்லை!

"நாலு வருஷம் காங்கிரஸ் கட்சிக்கு தலைவராக இருந்தும், பத்து வருஷம் மந்திரி வேலை பார்த்தும் இன்னும் பதவி ஆசை போகவில்லை!" என்று கூட சிலர் சொல்லுவார்கள்!

"தந்தையைப் போலவே சுந்தரமும் பதவி மோகம் கொண்டவன்! அப்பன் வகித்த பதவியை மகனும் வகிக்கிறான் பாருங்கள்" என்று பலர் தூற்றத்தான் செய்கிறார்கள்! ஆனால் சிங்காரம் எதையுமே காதில் போட்டுக் கொள்வதில்லை! சுந்தரத்தை மந்திரியாக்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறான் என்று சிலர் முணுமுணுக்கவும் செய்வார்கள்!

சுந்தரத்திற்கு பதவிமேல் எவ்வளவு ஆசையோ அதைவிட பத்து மடங்கு வேல்விழியின் மீது ஆசை!

வேல்விழிக்கோ சுந்தரம் என்றால் ஒரே வெறுப்பு! அலட்சியம்! அசடன், முட்டாள், ஒன்றுக்கும் உதவாத சோம்பேறி என்று எண்ணுவாள்!

ஆனால் அருமைநாயகத்திற்கு மட்டும் ஒரே பிடிவாதம்! "சுந்தரத்தின் சொத்து வேல்விழிக்குத்தான் வரவேண்டும்" என்ற எண்ணம்!

"சுந்தரம்தான் எனக்குக் கணவரென்றால் எனக்குத் திருமணமே இல்லை! காலம் முழுவதும் நான் கன்னிப் பெண்ணுதான்!" என்ற வைராக்கியத்தோடு வேல்விழி இருந்தாள்!

இது அருமைநாயகத்தின் உள்ளத்தை வேதனையால் வேக வைத்துக்கொண்டே இருந்தது!

இப்படி சாகாமல் செத்துக் கொண்டிருந்த அருமைநாயகத்திற்கு வேல்விழியின் கடிதம் மனச்சாந்தியை அளிக்கத்தானே செய்யும்!

"வேல்விழி விவேகமுள்ளவள் வாழத் தெரிந்தவள்! அதனால்தான் திருந்தி விட்டாள்" என்ற நம்பிக்கையோடு அருமைநாயகம் ஆபீசுக்குப் புறப்பட்டார்!

அத்தியாயம்-8

"ரெங்க விலாஸ் — சமூக சேவா சங்கம்" என்ற போர்டு கம்பீரமாகத் தொங்கிக்கொண்டிருந்தது! "இந்த ரெங்கனாதபுரம் எஸ்டேட்டு முழுவதும் எனக்குத்தானே சொந்தம்" என்ற தோரணையில் எஜமானி ரங்கநாயகி அம்மாள் வெள்ளி வெத்திலைபாக்குப் பெட்டியுடன் அமர்ந்து கொண்டு தன் வேலையாட்களை மிரட்டிக்கொண்டிருந்தாள்!

ஒரு இளைஞனும், ஒரு பெண்ணும் உள்ளே நுழைந்தார்கள்! இளைஞன் ரங்கநாயகி அம்மாளைப் பார்த்து இருகரம்கூப்பி "வணக்கம்" என்று சொன்னான்! அந்தப் பெண்ணும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டாள்!

ரங்கநாயகி அம்மாள் வந்த இளைஞன்மீது வைத்த கண்ணை எடுக்கவேஇல்லை! அவனது அழகு அவளையே ஒருக்கணம் திகைக்க வைத்து விட்டது! செக்கச் சிவந்த மேனி, சிரிப்புத் தவழும் முகம், பார்த்தவர்களைச் சித்திரவதை செய்யும் கண்கள் பால் மணம் மாறாத பேச்சு இத்தனையும் சேர்ந்துவிட்ட அந்த இளைஞனைக் கண்டால் யார்தான் மனதைப் பறி கொடுக்க மாட்டார்கள்! ஒருவாறு ரங்கநாயகி அம்மாள் சமாளித்துக் கொண்டு "யாரப்பா நீ' எங்கே வந்தீர்கள்" என்று கேட்டாள்!

"நாங்கள் சோழபுரம் போக வேண்டும்! இருட்டி விட்டது! இரவு மட்டும் தங்கிப் போக கொஞ்சம் இடம் தர வேண்டும்" இளைஞன் தாழ்மையோடு வேண்டிக் கொண்டான்!

"அதற்கென்ன தங்கிப் போங்களேன்! சத்திரம் போல் இடம் கிடக்கிறது, நீங்கள் தங்கிப் போவதால் எனக்கென்ன குறைந்து விடப் போகிறது! தாராளமாகத் தங்கிப் போங்கள்" என்றாள் ரங்கநாயகி!

"திண்ணையிலேயே படுத்துக் கொள்ளுகிறோம், தலைக்கு வைத்துக் கொள்ள ஒரு கட்டை மட்டும் கொடுங்கள்" என்றான் அந்த இளைஞன்!

"திண்ணையிலா? குளிரும் உள்ளே வந்து படுத்துக் கொள்ளுங்கள்" என்று பரிவோடு கூறினாள் ரங்கநாயகி!

எவ்வளவோ வற்புறுத்தியும் அந்த இளைஞன் கேட்கவில்லை! தெருத் திண்ணையிலேயே படுத்துக் கொண்டார்கள்!

"என்னால்தானே உங்களுக்கு இந்த சிரமம்" அந்த இளைஞன் தன் கூட வந்த பெண்ணைப் பார்த்துக் கேட்டான்!

"இதோ பாருங்கள் இனிமேல் என்னை —"போங்க, வாங்க, நீங்க' என்று கூப்பிடக்கூடாது!" ஏன் இப்படிக்கூறுகிறாள் என்று அவன் யோசிக்க ஆரம்பித்தான்!

"பின்னே எப்படிக் கூப்பிடுவது"?

"போ, வா, நீ என்றுதான் கூப்பிடவேண்டும்!"

"அப்படிக் கூப்பிடுவது மரியாதை இல்லையே"!

"நமக்குள் என்ன மரியாதை வேண்டி இருக்கிறது", அவள் ஏதோ பாசத்தோடு கூறினாள் என்பதை அவன் உணரவில்லை!

"நமக்குள் என்றால்" ஒன்றும் தெரியாத அப்பாவி என்று இந்த வார்த்தை எடுத்துக் காட்டிற்று!

"நமக்குள் என்றால்-உங்களுக்கும் எனக்கும் என்று அர்த்தம்! புரிகிறதா?" என்று நையாண்டி செய்து கொண்டே அவன் அருகே அவள் நகர்ந்து படுத்தாள்!

"புரிகிறது! கொஞ்சம் தள்ளியே படு!"

"ஏன், என்னைப் பிடிக்கவில்லையா உங்களுக்கு?" அந்த வார்த்தையில் தான் எத்தனை தாகம் இருந்தது!

"ஏன் பிடிக்கவில்லை!"

"பிறகு தள்ளிப் படுக்கச் சொல்கிறீர்களே!"

"ஓட்டிப்படுத்தால் தான் பிடிக்கிறது என்று அர்த்தமா?"

"ஆமாம்!" அவளுடைய பதிலில் எவ்வளவு இன்பம் தேங்கி நிற்கிறது!

"வேல்விழி!"

"என்னத்தான்!"

இருவருமே போதையில் ஆழ்ந்தார்கள்! கண் சிவக்கும் அளவுக்கு மதுவுண்டால் எத்தனை பிரமை ஏற்படுமோ அத்தனை பிரமை!

இதற்குத்தானே அவள் இத்தனை நாளாகக் காத்திருந்தாள்! கிடைக்காத பரிசுகளெல்லாம் அவளுக்குக் கிடைத்தது! அவளுடைய வெல்லக் கன்னத்தைக் கிள்ளிக் கொண்டே இருந்தான்! அவளோ அவனுடைய சுந்தர உடலைத் தழுவிக் கொண்டாள்!

"எப்படி இருக்கிறது வேல்விழி?"

"ஈடு சொல்ல பொருள் ஒன்றுமில்லையே அத்தான்!"

"பாண்டியன் என்று சொல்லேன்!"

யார் கரங்கள் முந்தி அணைத்துக் கொண்டது என்பதே புரியவில்லை! இருவரும் ஒன்றானார்கள்!

"வேல்விழி! நீ யார்? என் மீது இவ்வளவு அக்கறை ஏற்படக் காரணமென்ன?" பாண்டியன் உண்மையைத் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டான்!

"நான் யாரா இருந்தால் உங்களுக்கென்ன? இப்போது உங்களுடைய மனைவி! சரிதானே!

"என்னையாவது யார் என்று புரிந்து கொண்டாயா?"

ஓ! புரிந்து கொண்டேனே —என் கணவரென்று!"

"குறும்புக்காரி நீ!"

"எல்லாம் இந்தக் கரும்புக்காரரிடம் கத்துக் கொண்டதுதான்!"

"அதிருக்கட்டும் என்னை எப்படிசிறையிலிருந்துவிடுவித்தாய்? காவல் காத்துநின்ற போலிஸ்காரர்கள் எல்லாம் சலாம் போட்டு அனுப்பினார்களே! அது எதனால்!"

"அது பெரிய கதை அத்தான்! பொழுது விடியட்டும் சொல்லுகின்றேன்! இப்போது தூங்குங்கள்!" இருவரும் அயர்ந்து தூங்க ஆரம்பித்து விட்டார்கள் என்பதை அவர்கள் விட்ட குரட்டை அறிவித்தது!

சுந்தரத்தை தூங்க வைத்து விட்டு ஜன்னலருகே வந்துநின்ற ரங்கநாயகிக்கு சித்தமே தடுமாறிக் கொண்டிருந்தது!

அந்தப் பளிங்குச் சிலைக்கு இந்தப் பட்டாடையை உடுத்திப் பார்த்தால் ... எத்தனை அழகு, எத்தனை அழகு! அவர் தூங்குவதே ஒரு இன்பத்தையல்லவா ஊட்டுகிறது! 'பாவி! எனக்குப் போட்டியாக அல்லவா அந்தப் பழிகாரி வந்து சேர்ந்தாள்!"

"ஐயோ! அந்த பால் வடியும் முகம் இந்தப் பளிங்குக் கோப்பைக்கல்லவா சொந்தம்!

"சொந்தந்தான்! யார் இல்லை என்றது! அந்த வஞ்சகியைத் தீர்த்து விட்டால்...! அந்த சுந்தரன் எனக்குத்தானே சொந்தம்!"

"ஆம்! அந்தப் பழிகாரியைத் தீர்க்காமல் விடப்போவதில்லை!"

ரங்கநாயகி உள்ளே சென்றாள்! பெரிய கொடுவாளைக் கையில் எடுத்துக் கொண்டாள்! வெளிக் கதவைத் திறந்தாள்! மெல்ல, மெல்ல வேல்விழி படுத்திருந்த பக்கம் வந்தாள்! ரங்கநாயகியின் நெஞ்சம் படபட வென்று அடித்துக் கொண்டது! ஒருக்கணம் அப்படியேதிகைத்து நின்று விட்டாள்! "கொலையா ஐயோ கொலையா? போலீஸ் பிடித்துக் கொண்டால்...!பிடித்துக்கொண்டால்என்ன, சுந்தரம் தான் கொலை செய்தான் என்று சொல்லி விடுவது!" ரங்கநாயகியினுடைய மனம் போராடிக் கொண்டிருந்தது!

"ஏன் தயங்குகிறாய்? வேல்விழி ஒழிந்தால்தான் உனக்கு வாழ்வு! போ! போ! தயங்காமல் போ!"

"ஆம்! போக வேண்டியதுதான்! அவள் ஒழிய வேண்டியதுதான்!" ரங்கநாயகி மனதைத் திடப்படுத்திக் கொண்டாள்!

தொடரும்

அடுத்த
இதழிலிருந்து
மாலைமணி
12 பக்கங்களாக
வெளிவரும்
விலை - 16 காசுகள்

நகர சபையின் வருமானம் உயர்ந்தால் தான் தொழிலாளிகளின் வாழ்வை செப்பனிட முடியும் !

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று கணக்குப்போடுவார்கள். அது போல மற்ற கட்சிக்காரர்களும் நமது கைகளுக்கு சந்தனத்தைத் தடவி நமது கைகளில் உள்ள வளையல்கள் எத்தனை சவரன்கள் இருக்கும் என்று மதிப்பிடுவது போல இந்தப் பிரயாண வரி போடும் விஷயத்தில் நடந்து வருகின்றனர்.

நகர சபையின் வருமானத்தைப் பெருக்க வேண்டுமென்று நினைத்தோம். அதற்காக வரி போட வேண்டுமென்று நினைக்கிறோம், அந்த வரி எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும். ஏழைகளைத் தாக்கக் கூடியதாக இல்லாமல் வசதியுள்ளவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டியதொன்றாக இருக்க வேண்டும். அதனாலே பிரயாண வரி போடலாமா என்று கேட்டோம். இவ்வளவு தான்.

தி. மு. க. வினர் பிரயாண வரி போடலாமா என்று கேட்டவுடனே பல கட்சிக்காரர்கள் ஒன்று சேர்ந்து கொண்டனர். இந்த வரியைப் பற்றி தங்களுக்குத் தெரிந்ததை யெல்லாம் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தனர் என்ன சொன்னார்கள். பிரயாண வரி என்றால் என்ன தெரியுமா? தாயைப் பார்க்க வரும் மகளுக்கா வரி? கணவனைக் காண வரும் மனைவிக்கா வரி? அப்பனைப் பார்க்க வரும் பிள்ளைக்கா வரி? பிள்ளையைப் பார்க்க வரும் அப்பனுக்கா வரி என்றெல்லாம் தாங்கள் கற்ற தமிழை இந்த அற்ப காரியத்திற்கு உபயோகிக்கத் தொடங்கி விட்டனர்.

என்னுடைய ஊரான காஞ்சிபுரத்திலே காங்கிரஸ் கட்சி நகர சபையிலே பதவியில் உள்ளது. சென்ற பத்தொன்பதாந் தேதி இந்த நகர சபையிலே பிரயாண வரி போட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். இங்கு யார் நகர சபை நிர்வாகத்தை நடத்தி வருகின்றனர்? காங்கிரஸ் கட்சியினர் தான் நகர சபை நிர்வாகத்தை நடத்தி வருகின்றனர். அவர்கள் தான் பிரயாண வரி போடலாமென்ற தீர்மானத்தை கொண்டு வந்துள்ளனர். சென்னையிலே மட்டும் தானா அரசு என்ற ஒரு பெரும் பாவியும், ஜீவரத்தினம் என்ற ஒரு பெரும் பாவியும் இந்த பிரயாண வரியை போடக் கூடாது.

எந்தக் காஞ்சிவரத்திலே, எந்த காங்கிரஸ் கட்சி தி. மு. க. வினர் சென்னையிலே போடலாமா என்று கேட்ட பிரயாண வரியைப் பற்றி தவறான பிரச்சாரங்கள் செய்யப்பட்டதோ அதே காஞ்சிவரத்தில் அதே காங்கிரஸ் கட்சியால் பிரயாண வரி போடலாமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படு முன் காஞ்சி நகரசபையிலே நகரசபைக்கு வரும் வருமானம் போதவில்லையே என்று ஒருவர் கூற, ஆம் வருமானத்தைப் பெருக்க புதிய வரி போட வேண்டுமென்று மற்றொருவர் கூற, என்ன வரி போடலாமென்று மற்றொருவர் கேட்க, பிரயாண வரி போட்டால் போச்சு என்று இன்னொருவர் கூற, அதுவா, அந்தவரி தி. மு.க. காரனால் கொண்டு வரப்பட்ட வரியாயிற்றே என்று இன்னொருவர் கூற, ஆமாம் ஆமாம் தி. மு.க.வினர் இந்த வரியை சென்னையில் போடலாமா என்று கேட்ட போது நாம் அதை எதிர்த்து ஜனங்களிடம் பிரசாரம் செய்தோமே என்று மற்றொருவர் கூற—ஜனங்கள் அதை இன்னுமா ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருப்பார்கள், மறந்து விட்டிருப்பார்கள் என்று இன்னொருவர் கூற அப்படியானால் சரி அந்த வரியைப் போடலாம் என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள்,

பிரயாண வரியை காங்கிரஸ்கார் போடலாம் ஆனால் தி.மு க. காரர் போடக்கூடாது. பிரயாண வரி போட்டு அதனால் வரும் வருமானத்தில் மக்களுக்கு ஏதாவது நன்மைகளை செய்து விட்டால் அதனாலே இந்த கட்சி வளர்ந்து விடுமே என்று மற்ற அரசியல் கட்சிகள் நினைக்கின்றன. ஒரு அரசியல் கட்சி பன்னிரண்டு பள்ளிகளை ஏற்படுத்துவதாலும், நாலு பாதைகளைப் போட்டு விடுவதாலும் அந்தக் கட்சிக்குத் தான் மக்கள் என்றென்றைக்கும் ஓட்டு போட்டு விடுவார்கள் என்று சொல்லிவிட முடியாது, இந்த வரி, அந்த வரி போட்டு மக்களுக்கு நாலு நல்ல காரியத்தை ஒரு அரசியல் கட்சி செய்து விட்டால் அந்த கட்சிக்கு மக்களிடம் நல்ல ஆதரவு கிடைத்து விடுமே அப்படி ஒரு கட்சிக்கு மக்களிடம் நல்லாதரவு கிடைத்து விட்டால் அடுத்த தடவை நாம் வர முடியாதே என்ற கவலை இருந்து வருகிறது, அந்தக் கவலை இருக்கிற வரை எந்த அரசியல் கட்சியும் மக்களுக்கு எந்த விதமான நன்மையும் செய்ய முடியாது.

மாநகராட்சி மன்ற லாரி தொழிலாளர்கள் தங்களது கோரிக்கைகளை தெரிவித்து அவைகளை நிறைவேற்றும் படி கேட்கின்றார்கள். அவர்கள் ஒன்றும் மேனா மினுக்கிகளாக இருந்து கோரிக்கைகள் எதுவும் கேட்கவில்லை. இங்கே இருக்கின்ற லாரி தொழிலாளர்களின் கோரிக்கைகள் மட்டுமேயல்ல, தமிழ் நாடு முழுவதிலுமே உள்ள லாரித் தொழிலாளர்கள் அனைவரது கோரிக்கைகளுமே கவனிக்கப்பட வேண்டியவை. காரணம் இங்குள்ள அரசியல் தலைவர்களில் நான் ஒருவன் தான் லாரி தொழிலாளர்களின் கஷ்டங்களை நன்கு அறிந்தவன். மற்ற அரசியல் கட்சி தலைவர்கள் எல்லாம் எங்குபோக வேண்டுமென்றாலும் இன்று காரில் ஏறுவார்கள். போக வேண்டிய இடத்திற்கு போய்த் திரும்பி வந்து விடுவார்கள். ஆனால் நான் அப்படியல்ல. இந்த பதினைந்தாண்டு காலமாக இரவு பகலென்று பாராமல்பிரயாணம் செய்து வருபவன். நான் ஏறும் வண்டிக்கு நாலு சக்கரமும், உள்ளே உட்காரஎன்று ஒரு இடமும் இருந்தால் போதும். உள்ளே என்ன சாமானிருந்தாலும் பரவாயில்லை. கார் என்ற பெயரிருக்க வேண்டும். ஓட வேண்டும். அவ்வளவு தான் எனக்குத் தேவை என்னுடைய மோட்டார் எந்த நிலையிலிருக்கிறது என்பது பலருக்குத் தெரியும். அது எவ்வளவு ஓட்டம் ஓடும் என்பதும் இங்குள்ள பல டிரைவர்களுக்கும் தெரியும். அதனால் அவர்கள் கேட்கின்ற கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்க வேண்டியது நமது கடமை.

லாரி டிரைவர்கள் சில சமயங்களில் இரண்டு இரவுகள் கூட சேர்ந்தாற்போல கண் விழித்துக் கொண்டு லாரிகளை ஓட்டிச் செல்ல வேண்டியிருக்கும். அப்படி ஓட்டிக் கொண்டு போகும் நேரத்தில் அவர்கள் சீட்டிலே உட்கார்ந்து இருப்பது சிலை வைத்தது போலிருக்கும் ஏன் சிலையை ஒப்பிட்டுச் சொன்னேன் என்றால் சிலைக்கு உள்ள கண் எப்படி ஆடாமல் அசையாமல் இருக்குமோ அப்படித் தான் லாரி டிரைவர்களது கண்ணும் ஆடாமல் அசையாமல் இருக்கும்! இதற்கு காரணம் அவர்கள் ஒரு கணம் கண் மூடினால் மறுகணத்தில் பக்கத்திலே உள்ள புளிய மரத்திலோ வேறு எதிலோ மோத வேண்டியது தான். இப்படி லாரிகள் மோதியதன் காரணமாக எத்தனை டிரைவர்கள் உயிரிழந்துள்ளனர், எத்தனை டிரைவர்கள் கண்ணிழந்துள்ளனர். எத்தனை டிரைவர்கள் கை, கால்களை இழந்துள்ளனர். இப்படிப்பட்ட கஷ்ட ஜீவனத்தில் உள்ள லாரி டிரைவர்களின் சிறிய குறைகளைக் கூட நீக்க முடியா விட்டால் பதினான்கு அடுக்கு மாளிகைகள் கட்டப்பட்டென்ன? பன்னிரண்டு மந்திரிகள் இருந்தென்ன? திட்டங்கள் தீட்டி தான் யென்ன பலன்.

இப்படிப்பட்ட லாரி டிரைவர்களின் குறைகளை தீர்க்க மாநகராட்சி மன்றம் மட்டுமே முன்னுக்குவர வேண்டுமென்பதில்லை! மாநில சர்க்காரும் முயற்சி எடுக்க வேண்டும். மாநில சர்க்காரென்ன. மத்திய சர்க்காரும் அக்கறை காட்ட வேண்டும்.

லாரி டிரைவர்களா? அவர்களது வேலை நேரம் இத்தனை மணி நேரமாக இருக்க வேண்டும். அவர்கள் இத்தனை நாள் வேலை செய்தால் இத்தனை நாள் விடுமுறை இருக்க வேண்டும். பிராவிடென்ட் பண்டு நிதியா? அது அவர்களுக்கும் தேவை தான், அவர்களுக்கும் இருக்கத் தான் வேண்டும். குடியிருக்க வீடுகள் கட்டிக் கொள்ள இந்த இந்த இடங்களை அவர்களுக்கு ஒதுக்கித்தருகிறோம் என்று மத்திய சர்க்காரே கட்டளை பிறப்பிக்க வேண்டும்.

கார்ப்பரேஷனிலே இந்த 700 லாரி தொழிலாளர்களுக்கு இந்த நன்மைகளை செய்யவேண்டுமென்று தி. மு. க. காரர் சொல்லிவிட்டால் அதை செய்து விடுவதா? கூடாது கூடவே கூடாது. பெருவாரியாக எல்லோரும் சேர்ந்து சொன்னால் தான் எதையும் செய்ய வேண்டும் என்று நினைக்கின்றனர் மற்ற கட்சியினர். இது ஜனநாயகத்திலே பரவியுள்ள ஒரு நோய்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். நகர சபையிலே நமது தோழர் ஜீவரத்தினம் ஒரு பசுவைக் காட்டி இது 10 படி பால் கறக்கிறது. ஆகையால் இதை நகர சபை வாங்கினால் மிகவும் நன்றாக இருக்குமென்பார். பக்கத்திலே உள்ள முனுசாமியும் ஆம் ஜீவரத்தினம் செல்வது சரி தான் இந்தப் பசுவை நகர சபை வாங்கவேண்டுமென்று கூறுவார். அரசுவும் அந்தப் பசுவைக் கட்டி பத்து படி பாலைக் கறந்து காட்டி, "பார்த்தீர்களா இந்தப் பசு பத்து படி பால் தருகிறது அதனால் இந்தப் பசுவை நகர சபை வாங்குவதற்கு எதிர்கட்சியினர் சம்மதம் தர வேண்டு"மென்று கேட்பார். உடனே எதிர்கட்சிக்காரர்கள் என்ன சொல்வார்கள் ஜீவரத்தினம் 10 படி பால் கறக்கிறது என்று சொல்லி விட்டார், அவர் அப்படிச் சொல்வதாலே இது பசுவாக இருக்காது எருதாகத் தான் இருக்க வேண்டும். அதனால் இந்தத் தீர்மானத்தை ஓட்டுக்கு விட வேண்டும். ஓட்டுக்கு விட்டுத் தான் முடிவு செய்ய வேண்டும் என்று கூறுவது எதிர்கட்சியினர் குணம். இப்படிப் பேசுகின்ற குணம் இன்றும் இருந்து வருகிறது. இப்படி ஏட்டிக்குப் போட்டியாகத் தான் பதில் தர வேண்டுமென்றால் என் தம்பிமார்களை எவரும் மிஞ்ச முடியாது. ஆனால் என் தம்பிமார்கள் அவர்களுக்கு உள்ள அக்கறையையும், பொறுப்பையும் மதித்து இப்படி நடந்து கொள்ளாமல் இருக்கிறார்கள்.

லாரி தொழிலாளர்களின் கோரிக்கைகளை கவனிக்க வேண்டுமென்றால்பணம்தேவை, "பணம் தேவை யென்றால் வரி போட வேண்டும் இந்த வரியை மாநில சர்க்கார் மட்டும் போட்டால்போதாது மத்திய சர்க்காரும்போட்டுத்தான்ஆகவேண்டும் அப்படி வரி போட்டால் உடனே நாங்கள் வரிபோட்டு விட்டோம் என்று தி.மு.க. காரர்கள் சர்க்காரை எதிர்த்துப் பிரச்சாரம் செய்கிறார்கள். இது தான் அவர்களிடம் உள்ள கடமையா, கண்ணியமா, கட்டுப்பாடா" என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் இம்மாதிரி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று நாம் பேசும் தோரணையிலேயே நம்மைத் தாக்கிப் பேசுகிறார்கள். அப்படிப் பேசுவது பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம். கடை எங்

7-ம் பக்கம் பார்க்க

நகரசபை முட்டையிட முடியாத ஒரு சேவல் கோழி !

மாநில சர்க்கார் ஒரு பெட்டைக் கோழி !

6-ம் பக்கத்தின் தொடர்ச்சி

தக் கடையாக இருந்தாலென்ன? கடையில் விற்பனையாகும் சரக்கு என்னுடைய சரக்கு என்று நினைக்கும் போது எனக்கு மெத்த மகிழ்ச்சி. அவர்கள் சொல்லுகிறார்கள்—தி. மு. க. காரர்கள் வரியே போடக் கூடாது என்று சொல்லுகிறார்கள் என்று. வரி போடாமல் நாட்டை எப்படி ஆள்வது என்று மக்களைப் பார்த்து கேட்கிறார்கள், தி. மு. க. காரர்கள் வரியே போடக் கூடாது என்று சொல்லவில்லை. இதை எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவனும் சொல்லமாட்டான். காரணம் வரி போடாமல் நாட்டை ஆளுவது முடியாத காரியம். அப்படி இருக்கும் போது வரியே போடக்கூடாது என்று சொல்ல முடியுமா? வரி போடக் கூடாது என்று சொல்லவில்லை. வரி போட்டுத் தான் எந்த காரியத்தையும் சாதிக்க வேண்டுமென்பதுமில்லை.

உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். சொறி பிடித்தவன் சொறிந்து கொள்வதைப் பார்க்கும் ஒருவன் அப்படி சொறிந்து கொள்ளாதே அதிகப் புண் ஆகிவிடும் என்று கூறினால் சொறி பிடித்தவன் என்ன சொல்வான்—''எனக்கல்லவா நான் படும் வேதனை தெரியும் உனக்கு என்ன தெரியும்'' என்று தான் கூறுவான். சிரங்கு வந்தவனுக்கு அரிப்பு ஏற்படும் அப்படி அரிப்பு ஏற்படுகின்ற நேரத்தில் அதிகமாக சொறியாமல் மிதமாக புண்ணை சுற்றி பக்குவமாகத் தடவிக் கொடுத்துக் கொண்டு அரிப்பை அடக்கிக் கொள்ள வேண்டும். இதை விட்டு அரிப்பு ஏற்படுகிறதேயென்று ஆன மட்டும் சொறிந்து விட்டால் புண் ரணமாகி பின்னால் அதிக வேதனை தரும். எனக்கே காலில் ஒரு கட்டி இருந்தது. இன்று தான் அது உடைத்துக் கொண்டது. அரிப்பு ஏற்படும் போதெல்லாம் நான் அதை பக்குவமாக தடவிக் கொடுத்துக் கொண்டு வருகிறேன். அது போல ஏழை எளியவர்களுக்கு எந்த அளவுக்கு வரி போட்டால் அவர்களால் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குத்தான் அவர்களுக்கு வரி போட வேண்டும். ஏழைகள் மீது போடும் வரி எப்படிப்பட்டதாக இருக்க வேண்டுமென்றால் புண் வந்தால் அரிப்பு ஏற்படும் போது எப்படி அதைப் பக்குவமாக தடவிக் கொடுத்து அரிப்பை நிறுத்துகிறோமோ அப்படி வசூலிக்கக் கூடிய வரியாக இருக்க வேண்டும். அதை விட்டு பள்ளிக்கூடம் வேண்டுமா எடு எட்டணா. பாதை வேண்டுமா எடு பத்தணா என்று சொல்லக் கூடாது. அப்படிக் கேட்பது சர்க்காரல்ல. அது பஜனை மடமாகத் தான் இருக்கும். ஏனென்றால் பஜனை மடத்தில் தான் எட்டணா கொடுத்தால் இந்த பாகவதர் காலட்சேபம் செய்ய ஏற்பாடு செய்யப்படும். பன்னிரண்டணா கொடுத்தால் இந்த வித்வானின் சங்கீதக்கச்சேரிக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று கூறுவது வழக்கம்.

ஏழை எளியவர்களுக்கு வருவாய் குறைச்சல். அவர்கள் மீது வரி போட்டால் அவர்களால் கொடுக்க முடியாது. ஆனாலும் வருவாயைப் பெருக்க வேண்டும். அதற்கு என்ன வழி லாபந்தரக் கூடிய தொழில் என்ன தொழில் என்று பார்க்க வேண்டும். அதை சர்க்கார் எடுத்து நடத்த வேண்டும்.

லாபந்தரக் கூடிய தொழில் என்ன தொழில்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னே அவன் மோட்டார் கிளீனராக இருந்தான். பின்னர் டிரைவரானான். டிரைவரான பின் இரண்டாயிரம் ரூபாய் சேர்த்து வைத்திருந்தான். அப்படி சேர்த்த பணத்தைக் கொண்டு கடன் தவணையில் ஒரு லாரி வாங்கினான். அந்தக் கடன் தொகையை ஒரு வருடத்திலேயே அடைத்துவிட்டான். பின்பு ஒரு லாரி இரண்டாகி, இரண்டு மூன்றாகி இப்போது இருபத்திரண்டு லாரிகளுக்கு சொந்தக்காரனாக இருக்கிறான் என்று டிரைவர்கள் பேசிக்கொள்வதைப் பார்க்கிறோம். எனக்குத் தெரிந்த வரை இந்த புதிய தலைமுறையிலே பணக்காரர்களானவர்களில் பலர் பஸ் முதலாளிகள் என்பது தெரிய வரும். பல சரக்கு மளிகைக் கடை வைத்து பணக்காரனாக வேண்டுமென்றால் தகப்பன் மளிகைக் கடை வைத்தால் பிள்ளை பணக்காரனாகலாம், பேங்க் (Bauk) வைத்து பணக்காரனாக வேண்டுமென்றால் பாட்டன் பாங்க் வைத்தால் தான் பேரன் பணக்காரனாக முடியும், அதை எண்ணிப் பார்த்துத் தான் சர்க்கார் பஸ் சர்வீசை எடுத்து நடத்துகிறது. நியாயப்படி கார்ப்பரேஷன் தான் பஸ் சர்வீசை எடுத்து நடத்த வேண்டும் ஏனென்றால் பாதைகளை செப்பனிடுகிறது. பாதைகளை பழுது பார்க்கின்றது. கார்ப்பரேஷனிடம் வர வேண்டிய இந்த மோட்டார் தொழிலை சர்க்கார் நடத்துவதற்குப் பதிலாக கார்ப்பரேஷன் நடத்த வேண்டும். சர்க்கார் பஸ் தொழிலை நடத்துவதன் மூலம் கிடைக்கும் லாபம் சர்க்காருக்குப் போகிறது. கார்ப்பரேஷனுக்கும் வர வேண்டிய வருமானம் இப்படி. சர்க்காருக்குப் போயிருக்கின்றது.

வருமானம் எல்லாம் சர்க்கார் எடுத்துக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறது. உங்கள் கோரிக்கைகளை நாங்கள் கவனிக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். இது எப்படி இருக்கிறது என்றால் சேவல் ஒன்றைப் பிடித்து வைத்துக் கொண்டு அதன் வயிற்றை அழுத்தி முட்டை இடு முட்டை இடு என்று கூறுவது போல இருக்கிறது. சேவலை வைத்துக் கொண்டு அதன் வயிற்றை அழுத்தி முட்டை இடு முட்டை இடு என்றால் அது எப்படி முட்டை இடும். அதனால் ஜீவரத்தினம் என்ன 'சொல்ல வேண்டும் முட்டை இடும் பெட்டைக்கோழி வேறு இடத்தில் அல்லவா இருக்கிறது. முட்டையை வேறு ஒருவன் அல்லவா சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான். இங்கிருப்பது சேவல் கோழிதான். அது முட்டை இடாது. சேவலை வேண்டுமானால் அறுத்து ஒரு நாளைக்கு குருமா செய்யலாம், அதனால் நீங்கள் கேட்கும் கோரிக்கைகளுடனே இதையும் சேர்த்துச் சொல்ல வேண்டும். எங்களிடம் பஸ் நிர்வாகத்தை விடுங்கள். சினிமா கொட்டகைகளை நகரசபையே எடுத்து நடத்த வேண்டும். சினிமா கொட்டகைகள் தனிப்பட்ட முதலாளிகள் நடத்தி வருகின்றனர். சினிமா படம் எடுப்பவர்கள் 'தங்களது படங்களை திரையிட வாரத்திற்கு ஐயாயிரம் ரூபாய் வாடகையாகக் கொடுத்து தங்களது படங்களை ஓட்டுகின்றனர். படம் வெற்றிகரமாக ஓடினால் சரி. ஓடாவிட்டால் தியேட்டர் முதலாளி பட முதலாளியைப் பார்த்து என்ன சார் படம் பிரயோஜனமில்லை போலிருக்கிறதே என்று கேலி பேசி படப் பெட்டியைத் தூக்கி தலையில் வைத்து அனுப்பி விடுவார். இவைகளையெல்லாம் 'நகரசபை செய்யுமானால் நீங்கள் 'இரண்டு காக்கி சட்டை கேட்டால் நான்கு காக்கி சட்டைகளாக வரும். அதை விட்டு லாபத்தை அடையும் கோவிந்தசாமியை விட்டு நஷ்டத்தை அடையும் கந்தசாமியிடம் எதைக் கேட்டு என்ன பயன்.

நகரசபை ஒரு ரூபாய் வரி வசூலிக்க வேண்டுமென்றால் அதை வசூலிக்க பத்தணா செலவு செய்ய வேண்டி இருக்கிறது. இதனால் தான் வருவாயைப் பெருக்க வேறு வழியைத் தேட வேண்டியிருக்கிறது.

8-ம் பக்கம் பார்க்க

விற்பனையாளர்களுக்கு

மாலைமணி பத்திரிகையின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் பாடுபட்டு உழைக்கும் விற்பனையாளர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்! நாளுக்கு நாள்—அதிகவேகமாக ''மாலைமணி''யை வளர்த்து வரும் உங்களுக்கு நாங்கள் என்றும் கடமைப்பட்டுள்ளோம்!

ஆனால் அதே நேரத்தில் உங்களோடு நாங்கள் சரிவர ஒத்துழைக்க முடியாமைக்கு மிக மிக வருந்துகிறோம்!

நீங்கள் கேட்கும் இதழ்களை எங்களால் அனுப்ப இயலவில்லை, உங்கள் தேவையை எங்களால் பூர்த்தி செய்ய முடியவில்லை, உங்களோடு சேர்ந்து நமது மாலைமணியை வளர்க்க எங்களால் இயலவில்லை! வருந்துகிறோம். மன்னிக்கவும்!

பத்திரிகை அடிக்கும் காகிதம் (நியூஸ்பிரிண்ட்) கிடைக்காத காரணத்தால் தேவையான அளவு இதழ்களை அச்சடித்துத்தர முடியவில்லை, இன்னும் இரண்டு வாரங்களில் இறக்குமதி காகிதம் கிடைத்துவிடுமாதலால் அந்த இரண்டு வாரங்கள் வரை பொருத்திருக்குமாறு வேண்டுகிறோம். அதன் பிறகு மாலைமணியை 12 பக்கங்களாக்கி உங்களுக்குத் தேவையான இதழ்களையும் அனுப்பி வைக்கிறோம்.

வாசக நண்பர்களுக்கு

பல ஊர்களிலிருந்து பல நண்பர்கள் விற்பனையாளர்கள் மீது குறைகூறி கடிதம் எழுதி இருக்கிறீர்கள்! விற்பனையாளர்கள் மீது ஏதும் குறையில்லை. விரைவில் அதிக இதழ்களை அனுப்பி உங்கள் குறையை போக்குகிறோம்.

நிர்வாகி
''மாலைமணி''
சென்னை-14

Registered as a Newspaper in CEYLON
Regd No. M. 7074

MALAIMANI

PhoneNo. 83285

நல்லறிவாளர்களின் சரித்திரத்தைப் படித்திராதவர்கள் தான், நம் கொள்கை யறியாதவர்கள்! மண விழாவில்

ஏ. இளஞ்செழியன் விளக்கம்

இ. தி. மு. க, உனுகொல்லை தோட்டக் கிளையின் உறுப்பினர் தோழர் பி. ராமசாமி அவர்களுக்கும், செல்வி சிரங்கம் அவர்களுக்கும். அங்குருமலை கிளை செயலாளர் தோழர் ஏ, பி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடந்தேறிய திருமணத்தின் போது இ தி. மு. க. பொதுச் செயலாளர் ஏ. இளஞ்செழியன் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

அன்புள்ள தலைவர் அவர்களே! பெருந்திரளாக கூடியிருக்கும் திராவிடப் பெருங்குடி மக்களே தாய்மார்களே. உங்கள் அனைவருக்கும் எனது அன்பு வணக்கம். இந்த மண விழாவில் நான் கலந்து கொள்ளப் போவதை, இரகசியமாக வைக்கப்பட்டிருந்தும் கூட, எப்படியோ செய்தி எட்டி பல்வேறு இடங்களிலிருந்தெல்லாம் கழகக் காளையர்கள் வந்து குழுமி இருப்பது கண்டு பெரும் வியப்படைகிறேன் எனது பெயரை மணவிழா அழைப்பிதழில் குறிப்பிட்டால், நமது கொள்கைகளை புரிந்து கொள்ளாத பிற்போக்குவாதிகள் சிலர்! ஒரு வேளை எனது வருகையைத் தடை செய்ய முனைவர் என்ற நோக்கத்தில் குறிப்பிடாமல் விட்டிருக்கின்றனர். தோட்டங்களில் கடமையாற்றும் வெள்ளைக்காரர்களிடம், "இளஞ்செழியன் பயங்கரவாதி புரட்சிக்காரன்!" என்றெல்லாம் புகார் செய்யப்பட்டு அச்சத்தை மூட்டி, இப்பகுதிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில்கலந்துகொள்ளவிடாமல் தடுத்துவிடுவதற்கான முயற்சியில் சிலர் ஈடுபட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன்.

"அறியாமைப் படுகுழியில் வீழ்ந்து கிடந்த மக்களைச் சீர்திருத்தி, அறிவுப் பாதையைக்" காட்டிய நல்லறிவாளர்களின் சரித்திரத்தை படித்திராத பரிதாபத்திற்குரியவர்கள் தான் என்போன்றோரின் கொள்கைகளுக்கு தடை போட எண்ணுவர் என்பதை இங்கு குழுமியுள்ளவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன். என்னாலோ அல்லது தி. மு. கழகத்தாலோ! இதுவரை எவ்விதக் கேடும் நிகழ்ந்ததில்லை. மாறாக நன்மையே விளைந்திருக்கின்றன! மலைநாட்டிலுள்ள வேறு கட்சிகளால் மூட்டிவிடப்பட்ட பகை உணர்ச்சிக்கு பலியான நம் திராவிடர்கள் ஏராளம்! ஏராளம்!! கட்சிப் போராட்டத்தால் நாள் தோறும் எங்காவது ஒரு இடத்தில் நம்மவர் பிணம் விழுகிறது! என்றாலும் இயக்கத்தில் ஒரு சிறு குழப்பமும் ஏற்படுவது கிடையாது. ஒரு சில தோட்டங்களில் அமைதியான சூழ்நிலை பரவுகிறது என்றால், அதற்கு நமது கழகத்தோழர்களின் கண்ணியம் மிகுந்த செயல்தான் காரணமாக இருக்கிறது. எந்தக் கட்சியின் வினைவால் எங்கேனும் பிணம்! விழுந்தால் அது நம் திராவிடனின் பிணமாக இருப்பதைக் காண்கிறோம்! கலங்குகிறோம் கண்ணீர் வடிக்கிறோம். அமைதியை நிலைநாட்ட முந்துகிறோம். இப்படியான நல்ல பணிகளை நாட்டில் பெருகச் செய்தும், என் செயல்களுக்கு தீங்கு விளைவிக்க எண்ணுகின்றனர். இங்கு என்னை நேரிலே பார்க்கிறீர்கள். பேசும் பேச்சையும் கேட்கிறீர்கள், இப்போது சொல்லுங்கள் நான் பயங்கரவாதியா? புரட்சிக்காரனா என்று, என்னைப்பார்த்தாலும் அப்படி தோன்றுகிறதா. எனவே இனியாவது நல்ல கண் கொண்டு என்னோடு கூட வருமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுச் செயலாளர் அவர்கள் மேலும் பேசுகையில் தமிழ் சமூகத்தினிடையே ஏற்பட்டிருக்கும் சாதிப்பாகுபாடுகளையும் மூட நம்பிக்கைகளையும், தக்க ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டி, இவைகளை ஒழிக்காவிட்டால் நம் இனத்திற்கே பெரும் இழிவைத் தேடியவர்களாவோம் என்று குறிப்பிட்டார். மண மக்களை வாழ்த்தி மற்றும் பலரும் பேசினர்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி

திராவிட முன்னேற்றக் கழக இளைஞர்கள், வாலிபர்கள், மாணவர்கள், மறவர் குலத்து பெண்கள் அனைவரும் ஒரு மூன்று மாத காலத்திற்கு சொந்த வாழ்வை மறந்து இந்தப் பணியில் இறங்குவார்களானால் 1962-ல் சென்னையில் அமையப் போகும் மந்திரி சபை திராவிட முன்னேற்றக் கழகத்தின் மந்திரி சபையாக இருக்கு மென்பதை நாம் திடமாகச் சொல்லலாம்!

சென்னை நகர சபைத் தேர்தலில் இரவு பகல் என்று பாராமல்—உச்சி வெய்யிலிலும். நடுநிசியிலும் தூங்காமல், படுக்காமல், அயராமல் ஒரு அணகாசையும் எதிர்பாராமல் பாடுபட்டு வெற்றியைத் தேடித் தந்த சென்னை தொண்டர்களைப் போல் தமிழகம் முழுவதுமுள்ள தொண்டர்கள் பணிபுரிய வேண்டும்!

நாம், உருப்படாத இலட்சியங்களைச் சொல்லி, மக்களுக்குப் பயன் படாத கருத்துகளை எடுத்துக் கூறி ஏமாற்றிடும் எத்து வேலைகளைப் புரியவில்லை!

நாட்டுக்காக, நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக, மொழிக்காக, நம் இனத்திற்காக பாடுபட்டு வருகிறோம்! எனவே நாம் சிறிதும் அஞ்சாமல், அயராமல் பணிபுரிந்தால் வெற்றி நிச்சயம், வெற்றி நிச்சயம்! வருங்கால மந்திரி சபையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மந்திரி சபையாக இருக்கும்!

பத்தாண்டு காலத்தில் பயனுள்ள நல்ல பணிகளைப் புரிந்து பதினோராம் ஆண்டு துவக்கத்தில் நுழையப் போகும் நாம் இந்த உறுதியை மேற்கொண்டு பணிபுரிய வேண்டும்! திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வெற்றியைத் தேடித்தர வேண்டும்! தென்னகத்திலும் புது வாழ்வை மலரச் செய்ய வேண்டும்! திராவிட நாட்டை திராவிட மக்களின் சொந்த நாடாக்க வேண்டும்!

இளைஞர்களே! மாணவர்களே! பெரியோர்களே! நாளைய தினமே துவக்குங்கள் இந்த வெற்றிப் பணியை!

7-ம் பக்கத் தொடர்ச்சி

சட்ட சபையிலே வருவாயைப் பெருக்க வழி இருந்தால் நீங்கள் தான் சொல்லுங்களேன் என்றார்கள். என்னைச் சொல்ல சொன்னதால் நானும் இறைச்சியை பதப்படுத்தி அனுப்பும் தொழிலை சர்க்கார் நடத்தலாமென்றும், கோழிப் பண்ணைகளை வைத்து நடத்தலாமென்றும் சொன்னேன், இதைக் கேட்டு விட்டு அங்குள்ளவர்கள் சே சே உங்கள் அண்ணாதுரைக்கு என்ன கசாப்பு கடை வைக்கச் சொல்கிறாரே என்று கேலி பேசினார்கள். என்னைவிட அறிவு படைத்தவர்கள் இருக்கலாம். ஆனால் அவர்கள் எல்லாம் ஒன்றும் சொல்லாத காரணத்தால் நான் எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். அவர்கள் ஒன்றும் சொல்லாமல் என்னை சொல்லும் படி கேட்டு விட்டு நான் சொன்ன பிறகு அதை வைத்துக்கொண்டு கேலி பேசுகின்றனர். இது எப்படி இருக்கிறது என்றால் குழந்தை பெற்றவள் ஒருவளைப் பார்த்து பிறந்தது என்ன குழந்தை என்று கேட்டு பெண் குழந்தை என்று சொன்னவுடன் சே பெண் குழந்தையா எப்பவும் பெண் குழந்தைதானா என்று சொல்வது போல இருக்கிறது. உனக்கு ஏதாவது குழந்தை உண்டா என்று கேட்டால் எனக்கா குழந்தை ஒன்றும் இல்லை என்று கூறுவது போல இருக்கிறது.

நகர சபையின் வருவாயைப் பெருக்க எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்றாக உட்கார்ந்து யோசனை செய்ய வேண்டும். எப்படி யெல்லாம் வருவாயைப் பெருக்க முடியும் என்று வழி வகைகளை ஆராய வேண்டும் அப்படிக் கூடிப் பேசினால் தான் வருவாயையும் பெருக்க முடியும் உங்கள் பிரச்னைகளையும் தீர்க்க முடியும்.

மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தைப் பற்றி யோசனை கூற சர்வகட்சி கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த கமிட்டியிலே பங்கு கொள்ள என்னையும் அழைத்துள்ளார்கள். நானும் ஒத்துக் கொண்டுள்ளேன். இந்த திட்டம் வெற்றியடைந்தால் காங்கிரஸ்காரருக்குத் தானே பெயர் ஏற்படும் நாம் ஏன் இந்த கமிட்டியில் சேர்ந்து யோசனை கூற வேண்டும் என்று இருப்பது, அப்படி இருப்பது சரியல்ல. அதனால் நகரசபை வருமானத்தைப் பெருக்க எல்லா கட்சித் தலைவர்களும் ஒன்று சேர்ந்து யோசனை செய்ய வேண்டும். செங்கல் சூளையை நடத்தலாம். ரொட்டிக் கிடங்குகளை எடுத்து நடத்தலாம். சிறிய, சிறிய சாமான்களை செய்ய முயற்சி செய்ய வேண்டும். சினிமா கொட்டகைகளை நகரசபையே எடுத்து நடத்த வேண்டும். இதை யெல்லாம் நகர சபை எடுத்து நடத்தினால் நகரசபை வருவாயை பெருக்க முடியும்.

நீங்கள் உங்கள் குறைகளை எல்லாம் அறிக்கையில் கொடுத்துள்ளீர்கள் அந்தக் குறைகளில் பலவற்றைத் தீர்க்க முடியும், தோழர் ஜீவரத்தினத்தையும், உங்கள் தலைவர் குசேலரையும் உங்களது குறைகளை தீர்க்குமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். அந்தக் குறைகளை எல்லாம் தீர்த்து வைப்பார்கள் என்று சொல்லி உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ, கல்விப்பிரகாசம் பிரஸ் ;404 திருவல்லிக்கேணி ஹைரோடு. சென்னை-5.
அலுவலகம் 1/35 வாணியர் தெரு. சென்னை-14